செய்யப்படும். இந்தப் பணிகள் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

4. ஈரோடு மாநகராட்சியில் அமைந்துள்ள முத்தம்பாளையம் ஏரி தூர்வாரும் பணி, நீர்வரத்து வாய்க்கால் மேம்படுத்தும் பணி போன்ற பணிகள் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதன்மூலம் ஒரு சுகாதாரமான சூழல் ஏற்படுவதுடன் நீர் ஆதாரமும் பெருகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஈ) சென்னை, உயர் நீதிமன்ற அரசு கிளை அச்சகத்திற்குப் புதிய வெப் ஆப்செட் இயந்திரம் வாங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், குறிப்பேடுகள், கையேடுகள், அரசிதழ்கள், அரசு நாட்காட்டிகள் உள்பட அரசுக்குத் தேவையான அனைத்து அச்சுத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பணியை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

அரசு அச்சகங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் புதிய இயந்திரம் கொள்முதல் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 1-00

சென்னையிலுள்ள உயர் நீதிமன்றத்தின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன், 1923 ஆம் ஆண்டு முதல் உயர் நீதிமன்ற வளாகத்தில் அரசு கிளை அச்சகம் செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகத்தில் உயர் நீதிமன்றத்தால் நாள்தோறும் வெளியிடப்படும் உயர் நீதிமன்ற வழக்குப் பட்டியல்கள், வார மற்றும் மாத வழக்குப் பட்டியல்கள், உயர் நீதிமன்ற பயன்பாட்டிற்குத் தேவையான 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு வருகின்றன. இங்கு, தற்போது பயன்பாட்டிலுள்ள “வெப் ஆப்செட்” இயந்திரம் 25 வருடங்களுக்கு முன்பு கொள்முதல் செய்யப்பட்ட இயந்திரம் என்பதால், அன்றாடப் பணிகளைக் குறித்த நேரத்தில் முடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. தினந்தோறும் மாலையில் பெறப்படும் சுமார்

2016 ஆகஸ்ட் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*400 பக்கங்கள் கொண்ட வழக்குப் பட்டியலையும், பிற அச்சுப் பணிகளையும் காலதாமதமின்றி அச்சிட்டு வழங்கிட, சென்னையிலுள்ள உயர் நீதிமன்றக் கிளை அச்சகத்திற்கு 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய புதிய "வெப் ஆப்செட்" இயந்திரம் ஒன்று கொள்முதல் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கையால், உயர் நீதிமன்ற அரசு கிளை அச்சகத்தில் அச்சுப் பணிகளை விரைவாகவும், நவீன முறையிலும், நேர்த்தியாகவும், உயர் தரத்திலும் மேற்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

### (உ) கோயம்புத்தூர், மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், சென்னை, திருமுடிவாக்கத்தில் குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான அடுக்குமாடி தொழில் வளாகம் அமைத்தல், புதிய தொழிற்பேட்டைகள் நிறுவுதல், காக்களூர் தொழிற்பேட்டையில் சூரிய சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிக வேலைவாய்ப்பினை வழங்குகின்றன. எனவே, இந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 5,97,395 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தத் தொழில் நிறுவனங்களில் 1,00,101 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் 16 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குக் கடந்த 5 ஆண்டுகளில் 470 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்:*

*1. மின் மற்றும் மின்னணுத் தொழில் முனைவோர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில் 517 மேம்படுத்தப்பட்ட*